DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -7

| | | |
|---|---|---|
| Name | : திரு. கண்ணன் | Caste: |
| Father's Name: | திரு. சத்திவேல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of June - 2023.

A1 and A3 to A6 Present.

**08.06.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மேற்கு தாலுக்கா, பெருமாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.11.2011 ஆம் தேதியன்று நான் ஆட்டையாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் காலை சுமார் 11.45 மணிக்கு ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் கொடுத்தார்கள்.

விஜயன் கொலை வழக்கு சம்மந்தமாக விசாரிப்பதற்காக அந்த கடிதம் கொடுத்தார்கள். அந்த கடிதத்தை நான் பெற்றுக்கொண்டு அன்றைய தினம் பிற்பகல் 12.00 மணிக்கு ஆட்டையாம்பட்டி காவல்நிலையம் சென்றேன். அருண்குமார் என்பவர் சம்மந்தமாக விசாரணை செய்வதற்காகத்தான் என்னை அழைத்திருந்தார்கள். நான் காவல்நிலையம் சென்றபோது ஆய்வாளரும், ஒரு தட்டச்சரும் அங்கு இருந்தார்கள்.

என்னுடன் எனது கிராம உதவியாளர் ராஜீ என்பவர் வந்திருந்தார். போலிசார்

அருண்குமாரை விசாரித்தார்கள். (சாட்சி தனக்கு பதற்றமாக இருப்பதாக சொல்லுகிறார். சாட்சியம் அளிக்க தடுமாறுகிறார். எனவே சாட்சி சாட்சி கூண்டிலிருந்து இறக்கிவிடப்பட்டு நீதிமன்றத்தில் அமரவைக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டது. அவர் தன்னை ஆசுவாசபடுத்திக்கொள்ள காலஅவகாசம் வழங்கப்பட்டது. )

சாட்சி விசாரணையானது ஐந்து நிமிட இடைவெளிக்கு பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

அருண்குமார் ஆய்வாளரிடம் கடந்த 01.09.2014 அன்று அவர் சுந்தரமூர்த்தி, மேகநாதன், கிருபாகரன், சந்தோஷ்குமார், ஆனந்தன் ஆகியோர்களுடன் சேர்ந்து விஜயனை கொலை செய்ததாக சொன்னார். அப்படி கொலை செய்வதற்கு ரூ.2,00,000/- கொடுப்பதாக சுந்தரமூர்த்தி கிருபாகரனிடம் சொன்னதாக சொன்னார். கிருபாகரன் அத்தொகையில் இருந்து ரூ.10,000/-த்தை தனக்கு கொடுத்ததாகவும், ஆனந்தனுக்கு ரூ.50,000/-ம் கொடுத்ததாகவும் சொன்னார்.

அந்த ரூ.10,000/-த்தை கொண்டு வாடகை தொகையாக ரூ.3000/-த்தை வாடகை தொகையை தான் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளரான ரகுமான் என்பவருக்கு கொடுத்தாக சொன்னார். சேலம், கல்லாங்குத்து போஸ்ட்ஆபிஸ்க்கு பின்புறம் ரகுமானின் வீடு உள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வாளர் எங்களை ரகுமானின் வீட்டிற்கு அழைத்துச்சென்று ரகுமானிடம் இருந்து மேற்படி ரூ.3000/-த்தை பெற்றுக்கொண்டார்.

அதற்கான மகஜரில் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் கிராம உதவியாளர் ராஜீ என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். அந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.13. அந்த பணம் சம்மந்தப்பட்ட புகைப்படம் அ.சா.பொ.11. மறுபடியும் நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார். சாட்சி எதிரி அருண்குமாரை சரியாக அடையாளம் காட்டுகிறார்.

பின்னர் 25.11.2014 அன்று காலை 10.45 மணிக்கு விஜயன் கொலை வழக்கு சம்மந்தமாக கிருபாகரன் என்பவரை விசாரணை செய்வதற்கு சாட்சியாக நான்

காவல்நிலையத்திற்கு வரவேண்டும் என்று ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திலிருந்து எனக்கு கடிதம் கொடுத்தார்கள். அதனை பெற்றுக்கொண்டு அன்று காலை 11.00 மணிக்கு நான் காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் வைத்து கிருபாகரன் என்பவர் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தார்.

கிருபாகரன் அவரது வாக்குமூலத்தில் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த தேதியிலிருந்து சுமார் 4 மாதங்களுக்கு முன்பாக கொண்டலாம்பட்டி மதுபான பாரில்வைத்து சுந்தரமூர்த்தியை அவர் பார்த்ததாகவும், அப்போது சுந்தர்மூர்த்தி அவரிடம் விஜயன் என்பவர் சுந்தமூர்த்திக்கு தொந்தரவு கொடுப்பதாகவும், எனவே அவரை கொலை செய்ய வேண்டும் என்று சொன்னதாகவும் சொன்னார்.

அதிலிருந்து 2 வாரங்கள் கழித்து கிருபாகரன் அவரது நண்பர்கள் ஆன சந்தோஷ்குமார், மேகநாதன், அருண்குமார், ஆனந்தன் ஆகியோர்களுடன் கிச்சிப்பாளையம் மதுபான பாருக்கு சென்றதாகவும், அங்கு வைத்து விஜயனை கொலை செய்ய வேண்டும் என்று தாங்கள் முடிவு செய்ததாகவும், சுந்தரமூர்த்தி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு முடிவு செய்ததாகவும், கிருபாகரன் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தார்.

அதிலிருந்து 2 வாரங்கள் கழித்து கிருபாகரன், மேகநாதன், சந்தோஷ்குமார், அருண்குமார் ஆகியோர்கள் வீரபாண்டி பேக்காட்டிற்க்கு சென்று விஜயனை நோட்டம்பார்த்தாகவும், பின்னர் 01.09.2014 அன்று கிருபாகரன் ஆனந்தன் என்பவரை விஜயனை நோட்டம்பார்ப்பதற்காக பேக்காட்டிற்கு அனுப்பியதாகவும், விஜயன் இரவு 8.00 மணிக்கு அரியானூருக்கு வந்ததாகவும், இரவு 9.00 மணிக்கு விஜயன் அரியானூரில் இருந்து பேக்காட்டிற்கு கிளம்பியதாகவும், பின்னர் கிருபாகரனும்,. மேகநாதனும் இருசக்கர வாகனத்தில் பேக்காட்டிற்கு சென்றதாவும், சந்தோஷ்குமாரும், அருண்குமாரும் பேக்காட்டிற்கு சென்றதாகவும், சுந்தரமூர்த்தியும் இருசக்கர வாகனத்தில் பேக்காட்டிற்கு வந்ததாகவும், பழனிச்சாமி என்பவரது தென்னந்தோப்பிற்கு தாங்கள் ஐவரும் சேர்ந்து விஜயனை கட்டி கொண்டு சென்றதாகவும், சுந்தரமூர்த்தி விஜயனை இரண்டு முறை குத்தியதாகவும், ஆனந்தன் விஜயனின் முடியை

பிடித்துக்கொண்டதாகவும், அருண்குமார், சந்தோஷ்குமார், மேகநாதன் ஆகியோர் விஜயனின் கை, கால்களை பிடித்துக்கொண்டதாகவும், கிருபாரன் விஜயனின் கழுத்தை அறுத்ததாகவும், கிருபாகரன் அவரது வாக்குமூலத்தில் சொன்னார்.

பின்னர் தாங்கள் அரியானுார் வந்துவிட்டதாகவும், பின்னர் சேலம் சென்றுவிட்டதாகவும், விஜயனை கொலை செய்வதற்காக சுந்தரமூர்த்தி ரூ.2,00,000/– கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், 03.09.2014 அன்று சுந்தரமூர்த்தி கிருபாகரனுக்கு ரூ.1,00,000/– கொடுத்ததாகவும், 01.10.2014 அன்று சுந்தரமூர்த்தி கிருபாகரனுக்கு ரூ.85,000/– உத்தமசோழபுரம் ஈஸ்வரன் கோவில் அருகில் வைத்து கொடுத்ததாகவும், மீதி ரூ.15,000/–த்தை பின்னர் சுந்தரமூர்த்தி கிருபாகரனுக்கு கொடுத்ததாகவும், தான் மேற்கண்டவாறு வாங்கிய தொகையை கொ்ண்டு TN 54 J 8555 என்ற பதிவெண் கொண்ட Honda இருசக்கர வாகனத்தை வாங்கியதாகவும், மீதி பணத்தை கொண்டு மற்ற எதிரிகளுக்கு பேண்ட் , சட்டை வாங்கி கொடுத்ததாகவும், மது அருந்தியதாகவும், தருமபுரி தொப்பூர் கணவாயில் வைத்து தன்னுடைய செல்போன் சிம்கார்டை 17.10.2014 அன்று உடைத்து போட்டுவிட்டதாகவும், அதன்பின்னிட்டு தாங்கள் சேர்ந்து கொலை செய்த விவரம் போலிசுக்கு தெரிந்துவிட்டதால் தான் நீதிமன்றத்தில் சரணடைய போவதாக தனது நண்பர்களுக்கு போன் மூலம் தெரியப்படுத்தியதாகவும், ஓமலுார் நீதிமன்றத்தில் 18 ஆம் தேதி சரணடைந்துவிட்டதாகவும் கிருபாகரன் அவரது வாக்குமூலத்தில் சொன்னார்.

பின்னர் கிருபாகரன் ஆய்வாளர் அழைத்துச்சென்று கொலை செய்யப்பட்ட இடத்தை காட்டினார். பின்னர் நாங்கள் அனைவரும் காவல்நிலையத்திலிருந்து திரும்பி விட்டோம்.

பின்னர் 27.11.2014 அன்று இரவில் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திலிருந்து எதிரி சுந்தரமூர்த்தியை மறுநாள் விசாரணைசெய்யப்போவதாக எனக்கு கடிதம் கொடுத்தார்கள். 28.11.2014 அன்று நானும், எனது உதவியாளர் ராஜீ என்பவரும் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு காலை 6.00 மணிக்கு சென்றோம். அங்கு வைத்து சுந்தரமூர்த்தி விஜயன் கொலை

வழக்கு சம்மந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனக்கும் விஜயனுக்கும் 8–1/4 ஏக்கர் மற்றும் 5–1/4 ஏக்கர் நிலங்கள் சம்மந்தமாக பிரச்சனை இருப்பதாகவும், அந்த நிலங்கள் இணைக்காடுகள் என்பதாலும், கூட்டுப்பட்டாவாக இருப்பதாலும், தன்பெயருக்கு அந்த நிலங்களை சுந்தரமூர்த்தி எழுதிக்கொடுக்க வேண்டும் என்று விஜயன் கேட்டதாகவும், அதனால் பகை ஏற்பட்டதாகவும், அது சம்மந்தமாக தான் கொண்டலாம்பட்டி மதுபானபாரில் வைத்து கிருபாகரனை பார்த்ததாகவும், அதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பாகவே தனக்கும் கிருபாகரனக்கும் பழக்கம் இருந்தது என்றும், விஜயனுடன் தனக்குள்ள பிரச்சனை பற்றி தான் கிருபாகரனிடம் சொன்னதாகவும், கிருபாகரன் அவரது நண்பர்களான அருண்குமார், மேகநாதன், சந்தோஷ்குமார் ஆகியோர்களை சந்தித்து இது சம்மந்தமாக ஆலோசித்தாகவும், பின்னர் கிருபாகரன், அருண்குமார், மேகநாதன், சந்தோஷ்குமார் ஆகியோர் விஜயனை கண்காணித்தாகவும், 01.09.2014 அன்று கிருபாகரன், அருண்குமார், மேகநாதன், சந்தோஷ்குமார், ஆனந்தன், சுந்தரமூர்த்தி ஆகியோர் சேர்ந்து விஜயனை கொலை செய்ததாகவும், சுந்தரமூர்த்தி அவரது வாக்குமூலத்தில் சொன்னார். சாட்சி எதிரி சுந்தரமூர்த்தியை சரியாக அடையாளம் காட்டுகிறார்.

அந்த வாக்குமூலத்தை போலிசர் பதிவு செய்தார்கள். அதில் சுந்தரமூர்த்தியிடம் முதலில் கையொப்பம் பெற்று அதன்பின்னிட்டு என்னிடமும், என்னுடைய உதவியாளர் ராஜீயிடமும் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் சுந்தரமூர்த்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.14.

பின்னர் சுந்தரமூர்த்தி சம்பவ இடத்தை அடையாளம் காண்பித்தார். பின்னர் சுந்தரமூர்த்தியின் வீட்டிற்கு சென்றோம். சுந்தரமூர்த்தி வீட்டின் கூரையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கொடுத்தார். அதனை ஆய்வாளர் மகஜரில் எழுதிக்கொண்டார். அந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த மகஜர் ஏற்னவே அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சுந்தரமூர்த்தி சம்பவத்தின் போது அவர் அணிந்திருந்த சட்டையை எடுத்து கொடுத்தார். அதையும்

ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நான் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அது லைட்பச்சை நிற சட்டை. அந்த சட்டை தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.சா.பொ.6 தான்.

பின்னர் சுந்தரமூர்த்தி சம்பவத்தின் போது பயன்படுத்திய TN 30 AR 7255 என்ற பதிவெண் கொண்ட TVS XL Heave duty வாகனத்தை சுந்தரமூர்த்தியின் வீட்டின் கிழக்குபுறம் இருந்து ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் சுந்தரமூர்த்தின் வீட்டில் வைத்து சிம்கார்டு இல்லாத சாம்சங் செல்போன் ஒன்றையும், சிம்கார்டுடன் கூடிய எம்டிஎஸ் செல்போன் ஒன்றையும் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த செல்போன்கள் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான். TVS XIL வாகனம் மற்றும் செல்போன்கள் கைப்பற்றப்பட்டதற்குரிய மகஜர்களில் நான் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். பின்னர் நாங்கள் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டோம்.

பின்னர் 02.12.2014 அன்று விஜயன் கொலை வழக்கு சம்மந்தமாக மேகநாதன் என்பவரை விசாரணை செய்வதற்கு காவல் ஆய்வாளர் என்னையும் எனது உதவியாளரையும் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார். மேகநாதனை ஆய்வாளர் விசாரணை செய்தார். நடந்த சங்கதிகளை மேகநாதன் சொன்னார். விஜயனை எப்படி கொலை செய்தோம் என்று சொன்னார் பின்னர் மேகநாதன் சம்பவ இடத்தை அடையாளம் காண்பித்தார். பின்னர் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு வந்துவிட்டோம். மேகநாதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.15. சாட்சி எதிரி மேகநாதனை சரியாக அடையாளம் காட்டுகிறார்.

அதே தினத்தன்று பிற்பகல் 1.00 மணிக்கு எதிரி சந்தோஷ்குமாரை ஆய்வாளர் விசாரித்தார். சாட்சி எதிரி சந்தோஷ்குமாரை சரியாக அடையாளம் காட்டுகிறார். எதிரி சந்தோஷ்குமார் விஜயனை எப்படி கொலை செய்தோம் என்று சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன்.

எனது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.16. பின்னர் எதிரி சந்தோஷ்குமார் கொலை நடந்த இடத்தை காட்டினார். பின்னர் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு திரும்ப வந்துவிட்டோம். ரகுமான் என்பவரிடம் இருந்து ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3000/- என்னிடம் காட்டப்படுவது தான் அது அ.சா.பொ.12.

**<u>3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

15.11.2014 அன்று காலை 9.00 மணிக்கு நான் அலுவலகம் சென்றுவிட்டேன். VAO க்கள் காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை அலுவலகத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று அரசாணை இருக்கிறது என்றால் சரிதான். பொதுமக்களுக்கு தீங்கு ஏற்பட்டு மாவட்ட ஆட்சியரோ அல்லது மாவட்ட வருவாய்அலுவலரோ அழைத்தால் மட்டும் தான் அலுவலகத்தை விட்டு செல்லவேண்டும் என்றும், அப்படி செல்லும் போது நோட்டிஸ்போர்டில் எழுதிவைத்துவிட்டு செல்லவேண்டும் என்றும், அந்த அரசாணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜமாபந்தி நடக்கும் போதும் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

நான் ஆட்டையாம்பட்டி VAO வாக 2014 ஆம் ஆண்டு July மாதம் பொறுப்பேற்றுக்கொண்டேன். அருண்குமார் குடியிருப்பது எனது எல்லைக்குட்பட்ட பகுதி கிடையாது என்றால் சரிதான். அருண்குமாரை 15.11.2014 அன்று நான் முதல்முறையாக காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு இன்று தான் பார்க்கிறேன்.

ஆட்டையாம்பட்டி கிராமநிர்வாக அலுவலகம் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு பின்புறம் அமைந்துள்ளது. காவல்நிலையத்திலிருந்து எனக்கு கடிதம் கொண்டு வந்தவரின் பெயர் எனக்கு தெரியவில்லை. ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்தின் அருகில் கடைகள், மற்றும் பேருந்துநிலையம் உள்ளது. குடியிருப்பு வீடுகள் கிடையாது. நான் காவல்நிலையத்திற்கு சென்ற போது புகார் கொடுப்பதற்காவும், விசாரணைக்காவும் பொதுமக்கள் வந்திருந்தார்களா என்று நினைவில்லை.

ஆய்வாளர் எதிரி அருண்குமாரை விசாரணை செய்தற்கு பின்னிட்டு சேலம், கல்லாங்குத்து பகுதியில் உள்ள அவர் குடியிருக்கும் ரகுமான் என்பவரது வீட்டிற்கு அழைத்து சென்றார். அந்த வீட்டில் ரகுமான் இருந்தார். அவரிடம் இருந்து ஆய்வாளர் ரூ.3000/-த்தை கைப்பற்றினார். அதற்காக ரகுமானிடம் எழுதி கையெழுத்து வாங்கிகொண்டார்களா என்றால் ரசீது மாதிரி எழுதிக்கொண்டார்கள். அந்த ரசீதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. மகஜரில் தான் நான் கையெழுத்து செய்தேன்.

மேற்படி பணம் சம்மந்தப்பட்ட புகைப்படம் எங்கே எடுக்கப்பட்டது என்றும், யார் எடுத்தது என்றும் எனக்கு தெரியாது. அதன்பின்னிட்டு நாங்கள் காவல்நிலையத்திற்கு திரும்பிவிட்டோம். எதிரி அருண்குமார் சம்பவ இடத்தை அடையாளம் காட்டவில்லை. ஆய்வாளர் எதிரி அருண்குமாரை சுமார் 15 நிமிடம் விசாரணை செய்தார். அப்போது கிராம நிர்வாக அலுவலர் செல்வம் என்பவரும் இருந்தார்.

ரகுமான் என்பவரது வீடு தார்சு வீடாகும். அந்த வீடு கிழக்கு பார்த்த வாசல்படி கொண்டது. ரகுமான் வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு சென்றதற்கு பிறகு என்னை விசாரிக்கவில்லை. ரூ.3000/- கைப்பற்றதற்குரிய மகஜரை ஆய்வாளர் காவல்நிலையத்தில் வைத்து தான் எழுதினார். அதன்பின்னிட்டு 02.12.2014 அன்று காவல் நிலையத்திலிருந்து என்னை யார் அழைக்க வந்தார்கள் என்று நினைவில்லை.

நான் அன்று காவல்நிலையம் சென்றபோது காவல்நிலையத்தில் ஆய்வாளர் மேகநாதன் மற்றும் சந்தோஷ்குமார் ஆகியோரை விசாரித்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர்களை ஆய்வாளர் விசாரணை செய்தற்கு பிறகு இருவரையும் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றோம். அப்போது பிற்பகல் 12.00 மணி இருக்கும். அதன் பின்னர் காவல்நிலையத்திற்கு திரும்பி விட்டோம். காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு என்னை அனுப்பி விட்டார்கள். அதன் பிறகு என்னை யாரும் விசாரணை செய்யவில்லை. மேகநாதன் மற்றும் சந்தோஷ்குமார் ஆகியோரும் எனது எல்லைக்குள் குடியிருக்கும் நபர்கள் அல்ல. அன்றை தினம் தான் அவர்களை முதன்முதலாக பார்த்தேன். அதன் பின்னிட்டு இன்று தான் பார்க்கிறேன்.

எதிரிகள் வரிசையாக நிற்பதன் காரணமாகத்தான் அவர்களின் நெம்பர்படி நான் அவர்களை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட மூன்று எதிரிகளையும் நான் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து பார்த்தாகவும், அதனால் நான் அவர்களை அடையாளம் காண்பிப்பதாகவும் , பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், இன்று நீதிமன்ற வராண்டாவில் எதிரிகள் நின்றுகொண்டு இருந்தபோது போலிசார் அவர்களை எனக்கு அடையாளம் காட்டியதன் அடைப்படையில் நான் அவர்களை அடையாளம் காட்டியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரி அருண்குமாருடன் நான் சேலம், கல்லாக்குத்துவில் உள்ள ரகுமான் வீட்டிற்கு சென்றதாகவும், எதிரிகள் சந்தோஷ்குமார், மேகநாதன் ஆகியோர்களுடன் சம்பவ இடத்திற்கு சென்றதகாவும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் பொய்யான ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு போலிசாரின் பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் முதல்சாட்சியத்தில் சொன்னது போல் எந்த சங்கதியும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் மேற்கண்ட மூன்று எதிரிகளும் எந்த ஒப்புதல் வாக்குமூலங்களும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்புதல்வாக்குமூலங்களின் பேரில் எத்தொகையும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சிவதாபுரத்தில் குடியிருக்கிறேன். ஆட்டையாம்பட்டிக்கும், சிவதாபுரத்திற்கும் இடையே 25 கி.மீ தொலைவு இருக்கும். தினமும் எனது வீட்டில் இருந்து தான் அலுவலகம் சென்று வந்தேன். எனது உதவியாளர் ராஜீ வேம்படித்தாளத்தில் குடியிருந்தார். வேம்படித்தாளத்திற்கும் ஆட்டையாம்பட்டிக்கும் இடையே 8 முதல் 10 கி.மீ தொலைவு இருக்கும். 27.11.2014 அன்று இரவு 9.00 மணிக்கு எனக்கு காவல்நிலையத்திலிருந்து கடிதம் வந்தது. பொதுவாக கிராமநிர்வாக அலுவலரின் அலுவலக நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தான் என்றால் சரிதான். அப்போது நான் தேர்தல் பணியில் இருந்த காரணத்தினால்

அலுவலகத்தில் இருந்தேன் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். மறுநாள் காலை 6.00 மணிக்கு நான் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு எதிரி சுந்தரமூர்த்தி என்பவரை விசாரணை செய்வதற்கு சாட்சியாக இருக்க வரவேண்டும் என்று கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த கடிதத்தை நான் ஜெராக்ஸ் எடுத்து வைத்துக்கொண்டு அசலை மறுநாள் காவல்நிலையத்தில் ஒப்படைத்துவிட்டேன்.

நான் சொல்வது போல் போலிசார் எனக்கு எந்த கடிதமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த கடித்ததில் நான் மறுநாள் காலை 6.00 மணிக்கு காவல்நிலையம் வரவேண்டும் என்று குறிப்பாக சொல்லப்பட்டிருந்தது. நான் மறுநாள் காலை 5.15 மணிக்கு எனது வீட்டிலிருந்து புறப்பட்டு காவல்நிலையம் சென்றேன். சுந்தரமூர்த்தி வாக்குமூலம் கொடுக்க கொடுக்க அதனை உதவிஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான்.

சுந்தரமூர்த்தியை விசாரணை செய்தற்கு பிறகு போலிசர் என்னை விசாரித்தார்களா என்றால் மகஜர் எழுதிக்கொண்டதற்கு பிறகு விசாரித்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்த போது எதிரி சுந்தரமூர்த்தி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து விஜயனை கொலை செய்ததாக கூறியிருந்தார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் அது பற்றி நினைவில்லை. அதற்காக பேசியபடி கிருபாகரனுக்கு தான் ரூ.2,00,000/– கொடுத்ததாக விவரமாக கூறியிருந்தார் என்றும், சுந்தரமூர்த்தி தான் பயன்படுத்திய செல்போன்களையும் எடுத்து ஆஜர் செய்ததாகவும் கூறியிருந்தார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

நாங்கள் காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு சுந்தரமூர்த்தியின் வீட்டிற்கு சென்ற போது எங்களுடன் VAO செல்வமும் வந்தார். பேக்காடு என்ற இடத்திற்கு நான் முன்னர் போனதில்லை. அரியானூரில் இருந்து பேக்காடு சுமார் 3 முதல் 3–1/2 கி.மீ தொலைவு இருக்கும். பேக்காட்டிற்கும், சுந்தரமூர்த்தி வீட்டிற்கும் இடையே சுமார் – 1/2 கி.மீ தொலைவு இருக்கும். சுந்தரமூர்த்தி வீட்டிலிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதற்காக மூன்று மகஜர்கள் எழுதப்பட்டது. அவை அனைத்தும் ஒரே சமயத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

அந்த மூன்று மகஜர்களையும் ஆய்வாளர் தான் எழுதினார். நான் சொன்னது போல் நான் பேக்காட்டிற்கோ, அல்லது சுந்தமூர்த்தியின் வீட்டிற்கோ போகவில்லை என்றாலும், என் முன்பாக எந்த சொத்துக்களும் சுந்தரமூர்த்தியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், நான் அனைத்து மகஜர்களிலும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்பாக சுந்தரமூர்த்தி எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், என் முன்பாக அவர் வாக்குமூலம் கொடுத்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது 15.11.2014 தேதிய விசாரணையில் 6 ஆம் எதிரி ஆனந்தன் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், மேலும் 2 ஆம் எதிரி கிருபாகரன் என்பவரிடம் இருந்து ஆனந்தன் ரூ.50,000/– பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.